[1974 மார்ச் 6

இணைப்பு III

256 ம் பக்கத்தில் 309 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)

தமிழ்நாடு தெய்வீகப் பேரவை உறுப்பினர்கள் மற்றும் தலைவர் பெயர், அலுவல் குறித்து அறிக்கை :—

(அ) இப்பேரவை, கீழ்க்காணும் திருமடங்களின் தலைவர் களைக் கொண்ட ஒரு மாநிலக் குழுவினாலும் தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்களாலும் நடத்தப் பெறுகின்றது.

1. திருவாவடுதுறை ஆதினம், திருவாவடுதுறை, தஞ்சை மாவட்டம்.

2. தருமபுரம் ஆதீனம், தருமபுரம், தஞ்சை மாவட்டம்.

3. காஞ்சி காமகோடி பீடம், காஞ்சிபுரம், செங்கற்பட்டு மாவட்டம்.

4. திருக்குறுங்குடி ஜீயர் மடம், நாங்குனேரி வட்டம், திருநெல்வேலி மாவட்டம்.

5. காசி மடம், திருப்பனந்தாள், தஞ்சை மாவட்டம்.

6. திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனம், மதுரை.

7. திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி, இராமநாதபுரம் மாவட்டம்.

8. வியாசராய மடம்.

9. ராகவேந்திர சுவாமிகள் மடம், நஞ்சன்கூடு.

10. ஞானப்பிரகாச சுவாமிகள் மடம், காஞ்சிபுரம், செங்கற்பட்டு மாவட்டம்.

11. பொம்மபுரம் ஆதீனம், மயிலம், தென்னாற்காடு மாவட்டம்.

12. ஞானியார் சுவாமிகள் மடம், திருப்பாதிரிப்புலியூர், தென்னாற்காடு மாவட்டம்.

13. ஈசானிய மடம், திருவண்ணாமலை, வட ஆர்க்காடு மாவட்டம்.

1974 மார்ச் 6]

14. சாந்தலிங்க சுவாமிகள் மடம், பேரூர், கோயம்புத்தூர் மாவட்டம்.

15. கௌமார மடம், சிரவணபுரம், கோயம்புத்தூர் மாவட்டம்.

16. ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை.

(இ) திருவருள் திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள், திருவண்ணாமலை ஆதினம், குன்றக்குடி, இராமநாதபுரம் மாவட்டம் (தவத்திரு குன்றக்குடி அடிகளார்).

(உ) பேரவையின் நோக்கங்களும், பணிகளும் பின் வருமாறு :—

(1) இந்து சமயத்தினர் அவர்களுடைய சமயத்தின் கொள்கைகள், கோட்பாடுகள், அருமைகள், பெருமைகள் இவற்றை அறிந்து கொண்டு அச்சமய நெறியில் நின்று ஒழுகும் வழி நடத்துதல்.

(2) இந்து சமய தத்துவ விளக்க நூல்களை அடக்க விலையில் வெளியிட்டு வழங்குதல். அவசியம் உள்ள இடங்களில் இலவசமாகவும் வழங்குதல்.

(3) சமய தத்துவங்களை விளக்கக்கூடிய வகையில் தமிழிலும், ஆங்கிலத்திலும் தாள்கள் நடத்துதல்.

(4) இந்து சமுதாயத்தைச் சார்ந்த இளைஞர்கள் சிறந்த கல்வியைச் சமய உணர்வோடு பெறுதற்குரிய வகையில் பணி செய்தல்.

இந்த நோக்கங்களை நிறைவேற்ற பேரவை மூன்று வகையான செயல்முறைகளை மேற்கொண்டு செயற்படுத்தி வருகிறது. அவை சமயப் பிரச்சாரம், கல்விப் பணி, சமுதாயத்தொண்டு என்பன.